புலமைவளரி 5


இலக்கை நோக்கி

நேரம் :-1:00 மணித்தியாலம் **புலமைவளரி 029** **புள்ளி** .....

பெயர்..... **பகுதி** I A.K.**மயூரன்**


01. முதலில் தரப்பட்டுள்ள உருவுக்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1.



1. 2. 3.

2.



1. 2. 3.

02. உரு **A** ஐ ஒத்த உருவைப் பெறுவதற்கு உரு **B** இல் செய்ய வேண்டிய மாற்றங்கள் எத்தனை என இனம் காண்க


3.



உருவம் A உருவம் B

1. 4 2. 5 3. 3


4.



1. 1 2. 2 3. 3

03. 5 ஆம் 6 ஆம் வினாக்களில் கட்டத்திலுள்ள உருக்களுடன் சேர்ப்பதற்கு மிகவும் பெருத்தமான உவை தெரிவு செய்க

5.












1. 2. 3.

6.












1. 2. 3.

04. 7 ஆம் 8 ஆம் வினாக்களில் அடுத்து வரும் உருவை தெரிவு செய்க


7.









.....








1. 2. 3.

8.



1. 2. 3.

05. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்க

9. எங்கள் தோட்டத்தில் உள்ள மரங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளவை பழமரங்கள் ஆகும். எல்லாப் பழ மரங்களிலும் காய்கள் காணப்பட்டன. காய்கள் உள்ள மரங்களில் சில பழமரங்கள் அல்லாதனவாகும். இவ்விபரங்களின்படி கீழே காணப்படும் எக்கூற்றுச் சரியானதாகும்?

1. தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலும் காய்கள் உண்டு.
2. பழமரங்கள் அல்லாத மரங்கள் சிலவற்றில் காய்கள் உண்டு.
3. காய்கள் உள்ள எல்லா மரங்களும் பழ மரங்கள் ஆகும்.

10. வெற்றிடங்களுக்கு நன்கு பொருந்தக்கூடிய சொல்லின் கீழே கோடிடுக.

..... காட்டின் மத்தியில் பயணம் செய்த ..... தனக்கு
..... வந்த கரடியை நோக்கித் துப்பாக்கியால் குறி வைத்தான்.

1. பெரிய, வித்துவான், மானுக்கு நேராக
2. அகன்ற, வேட்டைக்காரன், எதிரெதிராக
3. அடர்ந்த, தூதுவன், கீழ்

11. ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. சூரியன் உதிக்கும் பூக்கள் மலரும் மணம் வீசும்
2. கால் வழுக்குதல் காயம் ஏற்படும் கீழே விழும்
3. தாழ்நிலங்கள் மூழ்கும் மின்னல் மின்னும் மழை பெய்யும்

12. புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் முதற்பக்கத்தில் தரப்படும் தகவல்களுக்கேற்பச் சரியான கூற்று யாது?

1. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவது சித்தியடையும் மாணவர்களுக்கு பிரசித்தமான பாடசாலைகளை தெரிவு செய்வதற்கு ஆகும்.
2. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவது சித்தியடையும் மாணவர்களுக்கு உதவிப்பணத்தை வழங்குவதற்காகும்.
3. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவது மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப் பணம் வழங்குவதற்கும் ஆகும்.

13. ஒரு பாடசாலையின் விளையாட்டுப் போட்டியின் போது பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய நான்கு இல்லங்களுக்குச் சொந்தமாக கூடாரங்கள் அமைக்கப்பட்டன. பச்சை இல்லத்திற்குத் தென்மேற்குப் பக்கமாக 100m தூரத்தில் சிவப்பு இல்லம் அமைந்திருந்தது. சிவப்பு இல்லத்திற்கு வடமேற்கே 80m தூரத்தில் மஞ்சள் இல்லம் அமைந்திருந்தது. மஞ்சள் இல்லத்திற்கே வடகிழக்கே 100m தூரத்தில் நீல இல்லம் அமைந்திருந்தது. நீல இல்லத்திலிருந்து எத்திசையில் பச்சை இல்லம் அமைந்திருந்தது?

1. தென்மேற்கு 2. வடகிழக்கு 3. தென்கிழக்கு

14. ஒரு தவணைப் பரீட்சையில் கமல் விமலிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றான். விமல் சுமனிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றான். அமல் கமலிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றான். இவர்களில் குறைந்த, கூடிய புள்ளிகளை பெற்ற பிள்ளைகள் முறையே

1. அமல், விமல் 2. விமல், அமல் 3. கமல், அமல்

15.ஒரு மாதத்தின் பத்தாம் நாள் திங்கட்கிழமைக்கு முந்திய நாள் வருகிறது அம் மாதத்தின் முதலாம் முப்பதாம் நாட்கள் முறையே என்ன கிழமைகளில் வரும்?

1. ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை
2. சனிக்கிழமை, திங்கட்கழமை
3. வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை

16. நீளம், அகலம், உயரம் ஆகியன 8cm வீதம் உள்ள ஒரு மரச்சதுர முகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

1. 16 2. 64 3. 27

17. 2018ம் ஆண்டு ஜனவரி 1ம்திகதி திங்கட்கிழமை எனின் இவ்வருடத்தின் சரிநடுவில் அமையும் தினம் எது?

1. திங்கள் 2. செவ்வாய் 3. ஞாயிறு

18. ஒரு வகுப்பறையில் குறிப்பிட்டளவு மாணவர்கள் வந்தருந்தனர் அந்த வகுப்பின் வகுப்பாசிரியர், மாணவத்தலைவனை அழைத்து இன்று நீங்கள் எத்தனை பேர் வந்துள்ளீர்கள்? எனக் கேட்டதற்கு அந்த மாணவத்தலைவன் கூறிய பதில் பின்வருமாறு.


- நாங்களும்
- எங்களைப்போல் இன்னொரு பங்கும்
- அதேபோல் இரண்டு மடங்கும்
- அதன் பாதியும்
- உங்களையும் சேர்த்தால் 25 எனப் பதிலளித்தான்

எனின் இவ்வுரையாடலுக்கமைய வகுப்பிற்கு வந்திருந்த மாணவர்கள் எத்தனை பேர்?

1. 24பேர் 2. 36 பேர் 3. 38 பேர்

06. 19, 20 ஆம் வினாக்களுக்கு வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

19.



1.




2.



3.

20.



1. 
2. 
3. 

21. ரிசா தனது உண்டியலில் ஒவ்வொரு நாளும் தன்னிடம் கிடைக்கும் சிறிய பணத்தொகையைச் சேர்த்து ஒரு துவிச்சக்கர வண்டி வாங்கி பாடசாலைக்கு வருகின்றான். இச் செயலைக் குறிக்கும் பழமொழி

1. பேராசை பெருநட்டம்.
2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
3. சிறுதுளி பெரு வெள்ளம்.

22. ஒரு குளிர்பானப் போத்தல் 8 பேரை உபசரிக்கப் போதுமானது எனின் 70 பேரை உபசரிக்கத் தேவையான குளிர்பானப் போத்தல்கள் எத்தனை?

1. 10 போத்தல் 2. 9 போத்தல் 3. 6 போத்தல்

23. A , B எனும் இரு நகரங்களிற்கிடையிலான தூரம் 20 km ஆகும். நகரம் A இலிருந்து விமலன் மணிக்கு 3km வேகத்திலும் நகரம் B இலிருந்து கமலன் மணிக்கு 2km வேகத்திலும் ஒருவரை ஒருவர் நோக்கி நடந்தனர். இருவரும் காலை 7.00 மணிக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்த நேரம் யாது?

1. மு.ப 10.30 2. மு.ப 11.00 3. மு.ப 12.00

24. ஓர் ஒற்றை எண்ணை இன்னொரு இரட்டை எண்ணால் பெருக்க வருவது

1. ஒற்றை எண் 2. இரட்டை எண் 3. கூறமுடியாது.

25. குமாரிடம் ஒரே அளவு நீளமான 15 ஈர்க்குத் துண்டுகள் உள்ளன. அவன் செவ்வக வடிவம் ஒன்றை அமைப்பதற்கு ஆகக் குறைந்தது எத்தனை ஈர்க்குத் துண்டுகள் தேவை?

1. 6 2. 4 3. 8

26. அடுத்துவரும் ஐந்து இலக்கங்களின் கூட்டுத்தொகை 100 ஆகும். அவற்றில் நடுவில் வரும் எண் எது?

1. 18 2. 20 3. 21

27. கரனிடமுள்ள பணத்தை விட 40 ரூபாய் அதிகமாக குமாரிடம் உள்ளது. இருவரிடமும் உள்ள பணத் தொகை 380 ரூபாய் எனின் குமாரிடம் உள்ள பணத்தொகை யாது?

1. 420 ரூபாய் 2. 230 ரூபாய் 3. 210 ரூபாய்

28. நாற்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தாறு என்னும் எண்ணிலுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகையை 5 ஆல் பெருக்கி வரும் விடையிலிருந்து 10 ஐக் கழித்து வரும் எண்ணிற்கு முந்திய எண் யாது?

1. 100 2. 89 3. 90

29. அக்கா சட்டை தைக்க 4m துணி வாங்கினார் சட்டை தைத்த பின் 85cm துணி மீதமாகியது. அக்கா சட்டை தைக்கப் பயன்படுத்திய துணியின் அளவு யாது?

1. 3015cm 2. 315cm 3. 325cm

30. அ- அம்மா, உ- உரல், மா- மாவை, இ- இடித்து, பி- பிட்டு, கை- அவித்தார் கருத்துள்ள வாக்கியம் கொண்ட விடையை தெரிவு செய்க

1. அஉமாஇபிகை 2. உஅமாகைபிஇ
3. அகைஇபிஉமா

31. 5 பேருக்கு தேநீர் தயாரிக்க 1kg சீனி தேவை எனின் 20 பேருக்கு தேநீர் தயாரிக்க தேவையான சீனி எவ்வளவு ?


1. 5kg 2. 4kg 3. 3kg

32. வியாபாரி ஒருவரிடம் நான் ஒரே வகையான 5 காசுத்தாள்களைக் கொடுத்து ஒரு தாளினை பெற்றுக் கொண்டேன் எனின் நான் வியாபாரிக்குக் கொடுத்த காசுத்தாளாக இருக்க முடியாதது?


1. 100 ரூபா 2. 1000 ரூபா 3. 500

முதலில் தரப்பட்டுள்ள உருவிற்கு பொருத்தமான தாயக்கட்டையை தெரிவு செய்க.

33.



34.



35. சேகரிடம் 5 ரூபாய் நாணயக்குற்றிகளும் 2 ரூபாய் நாணயக்குற்றிகளுமாக 9 நாணயக்குற்றிகள் காணப்பட்டன அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 33 எனின், அவனிடம் காணப்பட்ட ஐந்து ரூபாய் நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

1. 5 2. 4 3. 6

36. மண்டபமொன்றில் 7 கதிரைகளைக் கொண்ட 6 நிரைகளும் 10 கதிரைகளை கொண்ட 5 நிரைகளும் காணப்பட்டன எனின், அம்மண்டபத்தில் காணப்படும் கதிரைகளின் அரைவாசி எண்ணிக்கை யாது?

1. 92 2. 46 3. 88

3, 5, 8 ஆகிய எண்களுக்குப் பதிலாக **A, B, C** எனும் எழுத்துக்களைப் பயன்படுத்தி பின்வரும் கணிதச் செய்கைகள் செய்யப்பட்டன. இதற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துக்கள் யாவை?

37. B + A = ……..


1. B 2. C 3. A

38. C × A - 8 = ……..

1. 16 2. 8 3. 9

39. ஒருவர் நடந்து செல்லும் போது அவரது நிழல் வலது கைப்பக்கமாக விழுந்தது. இவர் பற்றிய கூற்றுக்களில் சரியானது எது?

1. இவர் காலை வேளையில் வடக்குதிசை நோக்கிப் பயணிக்கின்றனர்.
2. இவர் மாலை வேளையில் தெற்குதிசை நோக்கிப் பயணிக்கின்றனர்.
3. இவர் காலை வேளையில் தெற்குதிசை நோக்கிப் பயணிக்கின்றனர்.



40. இவ்வுருவில் அவதானிக்க கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது

1. 2 2. 4 3. 6









நேரம் :-2:15 மணித்தியாலயம் **புலமைவளரி 029** **புள்ளி** .....

பெயர்..... **பகுதி** II A.K.**மயூரன்**

01. காண்டாமிருகத்தை ஆங்கிலத்தில் ரினோசரஸ் என்கிறோம் இது கிரேக்க மொழியில் இருந்து வந்தது. கிரேக்க மொழியில் ரினோஸ் என்றால் மூக்கு என்றும் கெரஸ் என்றால் கொம்பு என்றும் பொருள் எனவே மூக்கின் மேல் கொம்பை உடைய விலங்கு எனப்படுகின்றது. இன்னொரு அதிசயம் இதன் கொம்புகள் முடிகளால் ஆனது.

மேல் உள்ள பந்தியை அடிப்படையாக கொண்டு கீழ் உள்ள ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பந்தியில் எவ் மிருகத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது? .....

2. கிரேக்க மொழியில் "ரினோஸ்" என்பதன் கருத்து யாது? .....

3. ஒற்றைக் கொம்பு அரவும் உள்ள சொல் எது? .....

4. ஆச்சரியம் என்பதன் ஒத்த சொல் யாது? .....

5. இதன் கொம்பு எதனால் ஆக்கப்பட்டுள்ளது? .....

(5 புள்ளிகள்)

02. உயிர் மெய் எழுத்துக்களை உருவாக்குக.

1. க் + ஆ = ... 2. ங் + உ = ...

(1 புள்ளிகள்)

03. எதிர்ப்பாற் சொற்களை எழுதுக

1. புத்திரன்- .....

2. உழவன்- .....

3. எசமான்- .....

4. தமையன்- .....

(4 புள்ளிகள்)

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு அவ் வாக்கியத்தின் கீழ் எழுதுக.

1. மாணவன் கரும்பலகையைத் துடைத்தான்.

எழுவாய் - ..... பயனிலை - .....

செயப்படுபொருள் - .....

2. மரத்தை தச்சன் அரிந்தான்.

எழுவாய் - ..... பயனிலை - .....

(5 புள்ளிகள்)

05. பின்வரும் வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1.குயில் கூவியது. - .....

2.நட்சத்திரம் மின்னுகிறது. - .....

3.சிறந்த நூல் நல்ல நண்பனைப் போன்றது.- .....

(3 புள்ளிகள்)

06. கோடிடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்

1. விமானத்தைச் செலுத்துபவன் .....

2 .படங்கள் வரைபவன் .....

(2 புள்ளிகள்)

07. பின்வரும் சொற்றொடர்களைப் பொருத்தமான கீறிட்ட இடங்களில் நிரப்புக.
(விரைந்து விரைந்து, கண்ணை இமை காப்பது போல, தக தக, பென்னம் பெரிய, பெரிய பெரிய, இலவுகாத்த கிளி போல)

01. அம்மா ..... எங்களைப் பாதுகாப்பாக வளர்ந்தார்

02. அம்மா ..... பாத்திரத்தில் நீரை நிரப்பி வைத்தார்

(2 புள்ளிகள்)

08. வாக்கியம் முழுமை அடைவதற்கு அடைப்புக்குள் உள்ள சரியான சொல்லின் கீழ்க் கீறிடுக

01. குரு சீடனைப் பல்லாண்டு (வாலி, வாழி, வாளி) என வாழ்த்தினார்

02. வேகமாக வீசிய (வழி, வளி, வலி) மரத்தை வீழ்த்தியது

(2 புள்ளிகள்)

09. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் குறிக்கம் தமிழ்ச் சொல்லைத் தருக?

1. expiry date :- ……..

2. national flag :- ……..

3. monkey : - ……..

10. பின்வரும் தமிழ்ச் சொற்கள் குறிக்கம் ஆங்கிலச் சொல்லைத் தருக?

1. கரண்டி :- …….

2. கரும்பலகை :- ……..

11. பின்வரும் சிங்களச் சொற்கள் குறிக்கம் தமிழ்ச் சொல்லைத் தருக?

1. சகோதரயா :- …….

2. சீயா :- …….

3. ஒபட்ட :- …….

12. பின்வரும் தமிழ்ச் சொற்கள் குறிக்கம் சிங்களச் சொல்லைத் தருக?

1. பால் குடியுங்கள் …….

2. நான் வெளியே போகலாமா? …….

13. “எனது பாடசாலை ஓய்வு நாளில் சுவை மிக்க கனித்தோட்டத்தில் களித்தேன்” என்னும் தலைபபில் மூன்று வாக்கியம் அமைக்குக ஒவ்வொரு வாக்கியமும் ஆறு சொற்களுக்கு குறையாமல் அமைதல் வண்டும். எழுவாய் பயனிலை ஒழுங்கில் அமைதல் வேண்டும்.

1. ……

……

2. ……

……..

3. ……..

……..

01. நான்காயிரத்து நூற்று முப்பது என்பதை எண்குறியில் தருக.

02. அடுத்த எண் யாது?

1. 3099 …… 2. 59254 ……

03. எண் சட்டம் அமைக்கக?

1. 6300 2. 6325

04.

```
N 4 N
N 3 S
-------
6 7 8
```

1. N இன் பெறுமானம் யாது? ……..

2. S இன் பெறுமானம் யாது? ……

05. போத்தலில் உள்ள நீரின் அளவு 600ml அதிலிருந்து 350ml நீர் வெளியே எடுக்கப்பட்டால் எஞ்சும் நீரின் கொள்ளளவு யாது?

……..

06. கூட்டமொன்றுக்காக 12 வரிசைகளில் 8 பேர் வீதம் நின்று கொண்டிருந்தனர். அவர்களை 3 வரிசைகளில் நிற்க வைத்தால் ஒரு வரிசையில் எத்தனை பேர் நிற்பார்கள்?

.....

07. 4576, 5764, 7645, 6457 ஏறுவரிசைப் படுத்தி எழுதுக.

.....

08. அடுத்துவரும் 2 எண்களின் கூட்டுத்தொகை 193 ஆகும். அவ்விரு எண்களும் எவை?

.....

09. நண்பர்கள் மூவர் கொழும்பிலிருந்து கண்டிக்கு புகையிரதத்தில் பயணித்தனர். ஒருவருக்கான கட்டணம் ரூபா 325.00 ஆகும். அவர்கள் மூவரும் சேர்ந்து ரூபா 500.00 நாணயத்தாள்கள் இரண்டை கொடுத்தால் எவ்வளவு மீதி கிடைக்கும்?


.....

10. பின்வரும் விலைப்பட்டியலைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அரிசி 1kg + பருப்பு 500g	**- ரூபா 210.00**
அரிசி 1kg + தேயிலை 500g	**- ரூபா 320.00**
அரிசி 1kg	**- ரூபா 60.00**
பருப்பு 500g + சீனி 1kg	**- ரூபா 250.00**

1. 250g தேயிலையின் விலை யாது? .....

2. சீனி 1kg இன் விலை யாது? .....




11. இவ்வுருவிலுள்ள உச்சிகளினதும் முகங்களினதும் கூட்டுத்தொகை யாது

.....

12. உரு 1cm நீள, அகலங்களைக் கொண்ட சிறிய சதுரங்களால் ஆக்கப்பட்டுள்ளன

இதன் சுற்றளவு யாது? .....



13. உருவில் 1/6 நிழற்றப்பட்டுள்ளது




1. அதில் மேலும் 2/6 பங்கை நிழற்றுக.

2. அப்போது நிழற்றப்படாது எஞ்சியுள்ள பகுதியை பின்னமாக எழுதுக.

14. உருவிலுள்ள தகவல்களுக்கு ஏற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.

இருந்து	வரைக்கும்	தூரம்
திருகோணமலை	வவுனியா	90km
ஹொறொவபொத்தான	வவுனியா	45km
ஹொறொவபொத்தான	யாழ்ப்பாணம்	135km
திருகோணமலை	யாழ்ப்பாணம்	----------



15. A என்னும் ஒரு ஏக்கர் நெல் வயலில் இருந்து 120kg நெல்லும் B என்ற ஒரு ஏக்கர் நெல் வயலில் A யைப் விட இரண்டு மடங்கு நெல்லும் அறுவடை செய்யப் பட்டதெனின் இரண்டு வயல்களிலும் அறுவடை செய்யப்பட்ட நெல்லின் மொத்த நிறை யாது?

……..

01 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து. அதன் கீழ்க் கோடிடுக.

01. ஒரு நாட்டுக்கே உரித்தான தாவரங்கள் மாத்திரம் அடங்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) குங்கிலியமரம், பெரும்பிரம்பு, நிலவேம்பு
(2) மா, பெரும்பிரம்பு, ஈரப்பலா
(3) றம்புட்டான், ஆனைக்கொய்யா, மா

02. நீரினாலும், காற்றினாலும், பிராணிகளினாலும் முறையேபரப்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை எது?

(1) எண்ணை, தேங்காய், மா
(2) கடல்மாங்காய், எண்ணை, மரமுந்திரிகை
(3) மா, கடல்மாங்காய், தேங்காய்

03. தாவரங்களுக்குபிராணிகள் செய்யும் நன்மையான செயல்

(1) செவ்வெறும்புகள் தாவர இலைகளைச் சேர்த்துக் கூடு அமைத்தல்

(2) வௌவால்கள் பழங்களை உண்டபின் வித்துக்களை வெவ்வேறு இடங்களில் போடுதல்

(3) முள்ளம்பன்றிகள் தாவரங்களின் கிழங்குகளையும், வேர்களையும் உண்ணுதல்

04. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி

(1) தேனீ (2) வண்ணத்துப் பூச்சி (3) மயிர்க்கொட்டி

05. ஒரு நாட்டுக்கே உரித்தான முலையூட்டி விலங்கு

(1) ஆந்தை (2) வௌவால் (3) சுண்டெலி

06. ஈக்களால் பரவக் கூடியது

(1) மலேரியா நோய் (2)அம்மை நோய் (3)கழிச்சல் நோய்

07. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக் கூடிய நோய்

(1) யானைக்கால் (2) டெங்கு (3) வாந்திபேதி

08. கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்

(1) கடலை (2) சோயாஅவரை (3) நிலக்கடலை

09. மழை இல்லாத நாட்களில் அதிகாலையிலும் அந்திமாலையிலும் வானில்தெளிவாகத் தெரியும் கோள்

(1) வெள்ளிஆகும் (2) செவ்வாய் ஆகும் (3) சனிஆகும்

10. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்யவேண்டியது

(1) உடலைநன்குபோர்த்துதல்

(2) நன்குகாற்றோட்டம் கிடைக்கச் செய்தல்

(3) குளிர் நீர் பருகக் கொடுத்தல்

11. நிலத்தில் வளரும் தாவரமொன்றுநீரையும் பசளையையும் பெறுவது

(1) வேர்களினால் (2) இலைகளினால் (3) பூக்களினால்

12. "செக்கு"பயன்படுத்தப் படுவது

(1) ஆணி அறைவதற்கு (2) கருங்கல் உடைப்பதற்கு

(3) எண்ணெய் பிழிவதற்கு

13. நுளம்புகளை அழிப்பதற்குப் பொருத்தமான ஒரு முறை அல்லாதது

(1) சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்.

(2) துளசி இலைகளை எரித்துப் புகையூட்டுதல்.

(3) நீர் நிரப்பிய பாத்திரத்தில் மலர்களை இட்டுவைத்தல்

14. நிலத்தில் ஒன்றுசேரும் பல்வேறு கழிவுப் பொருட்களைச் சிறு துண்டுகளாக்கி, அவை உக்குவதற்குத் துணைபுரியும் பிராணி

(1) நத்தை (2) செவ்வெறும்பு (3) கறையான்

15. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?

(1) வலைப்பந்து (2) வொலிபோல் (3) கிரிக்கெட்

16. தண்டுத் துண்டுகளை நாட்டுவதன் மூலம் புதியதாவரங்களைப் பெறக் கூடிய இரண்டு பயிர்களாவன

(1) மரவள்ளி, பசளி (2) சோளம், மரவள்ளி (3) சோளம், பசளி

17. "நீர்ப்பிசாசு"என்பது

(1) நீர் நிலைகளுக்குஅருகேவாழும் ஒருபிராணி

(2) இரவுவேளைகளில் பயிர் நிலங்களுக்குவரும் ஒருபிராணி

(3) பிராணிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படும் ஓர் அமைப்பு

18. பொலீசார் சிலசோதனை நடவடிக்கைகளின் போது பயிற்றப்பட்ட நாய்களைப் பயன்படுத்துவர். அதன் போதுபிரதானமாக நாயின் எந்த இயல்பு பயன்படுத்தப்படும்?

(1) கூர்மையான கண்பார்வை

(2) தெளிவாகக் காதுகேட்டல்

(3) சிறந்த மோப்பசக்தி

19. இலங்கையின் அரச இலச்சினையில் சௌபாக்கியத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ள குறியீடுயாது?

(1) நிறைகுடம் (2) நெற்கதிர்கள் (3) தர்மசக்கரம்

20. பாரமான ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்குக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தக் கூடிய ஓர் உபகரணம் அல்லாதது

(1) பாரம் தூக்கி (2) கப்பி (3) குறடு

21. பனிக்கட்டிகள் சிலவற்றை ஒருகண்ணாடிக் குவளையினுள் இட்டு சிறிது நேரம் வெளியேவைத்திருந்த பின்னர் அதில் அவதானிக்க முடியாதது

(1) பனிக்கட்டிஉருகியிருத்தல்

(2) குவளையில் நீர் சேர்த்திருத்தல்

(3) குவளையிலிருந்துவளிக்குமிழ்கள் வெளியேறுதல்

22. மகாவலி, வளவை ஆகியநதிகள் கடலிற் சேரும் இடங்கள் முறையே

(1) மட்டக்களப்பு, அம்பலாந்தோட்டை

(2) மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை

(3) திருகோணமலை, அம்பலாந்தோட்டை

23. பின்வரும் விளையாட்டுக்களில் உடற்சக்திஅதிகஅளவில் விரயமாகும் விளையாட்டு

(1) தாம் இழுத்தல் (2) கயிறிழுத்தல் (3) சோகிபோடுதல்

24. தேசியகீதத்தைப் பாடும் போது உடலை வைத்திருக்க வேண்டிய சரியான நிலை அல்லாதது

(1) கவனமாக நிற்றல் (2) இலகுவாக நிற்றல்

(3) உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல்

25. இயற்கையானமலர்களையும், இலைகளையும் கொண்டுவாழ்த்து அட்டைதயாரிக்கும் நான்கு படிமுறைகள் பின்வருமாறு.

A – உலர்த்தியபூக்களையும், இலைகளையும் தேவைக்கேற்ப ஒட்டுதல்

B – தேவையான அளவுள்ள அட்டைத் துண்டொன்றினை வெட்டிஎடுத்தல்

C – இயற்கைப் பூக்களையும், இலைகளையும் புத்தகப் பக்கங்களுக்கு இடையே வைத்து உலர விடுதல்

D – பொருத்தமான வாழ்த்து அல்லது நற்பிரார்த்தனையை எழுதுதல் இவற்றின் சரியான ஒழுங்குமுறையாது?

(1) A, D, C, B (2) B, A, C, D (3) C, B, A, D

26. இயற்கையானகாற்றின் சக்திபயன்படும் ஒருசந்தர்ப்பம்

(1) பலூன் ஊதுதல்

(2) புல்லாங்குழல் வாசித்தல்

(3) பட்டம் பறக்கவிடல்




27. இவ்வுருவில் உள்ள பிராணியின் பெயர் என்ன?

(1) மட்டத்தேள்

(2) நண்டு

(3) பூரான்



28. இவ்வுருவினால் காட்டப்படும் தேசிய வீரர்

(1) கலாநிதி சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா

(2) கலாநிதி. டீ.பி. ஜாய

(3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

29. தமிழ், சிங்கள புத்தாண்டு காலப்பகுதிகளில் சத்தமிடும் பறவை

(1) காகம் (2) கிளி (3) குயில்

30. உடல் முழுவதும் முட்கள் கொண்ட பிராணி

(1) சிலந்தி (2) ஹககொய்யா (3) முள்ளம் பன்றி